**ப்ராம்ப்ட்டன் நகர் மன்றமானது (Brampton City Hall), பிப்ரவரி 16 முதல் 19 வரை நீட்டிக்கப்பட்ட பணி நேரத்தில் இயங்கும், இது முன் பதிவின் பேரில் மட்டுமே**

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 11, 2021) – நகர நிர்வாகமானது, குடியிருப்புவாசிகளும் வணிகர்களும் தங்கள் சொத்து வரிகளை செலுத்த வசதியாக, நகர் மன்ற அலுவலகத்தில் பின் வரும் தேதிகளில் பணி நேரத்தை நீட்டித்துள்ளது:

- செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 16, காலை 8:30 மணி முதல் மாலை 6 மணி வரை
- புதன்கிழமை, பிப்ரவரி 17, காலை 8:30 மணி முதல் மாலை 6 மணி வரை
- வியாழக்கிழமை, பிப்ரவரி 18, காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
- வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 19, காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

தங்கள் சொத்து வரிகளை, நகர் மன்ற அலுவலகத்தில் செலுத்துவதற்கு குடியிருப்புவாசிகள் முன்னதாகவே நகர் மன்ற வலைத்தளம் (City of Brampton website) எனும் வலைத்தளத்தில் தங்களுக்கான நேரத்தை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். ரொக்கம் பெறப்படமாட்டாது.

சொத்துவரிக்கான தவணைத்தேதியை இங்கு காணலாம்

இந்தச் சமயத்தில் நகர் மன்ற பெருநிறுவன கட்டிடங்களுக்கு வருகை தருவதற்கு முன்பதிவு செய்து கொள்வது அவசியம் என குடியிருப்புவாசிகளுக்கு நினைவூட்டப்படுகிறது. சில சேவைகள் மட்டுமே நேரில் இருந்து செய்யக் கிடைக்கும்.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, குடியிருப்புவாசிகள் இந்தச் சேவைகளை ஆன்லைனில், அல்லது கிடைக்கும் பட்சத்தில், இதர வழிகளில் அணுக கோரப்படுகிறார்கள். இப்படியாக சொத்து வரிகளை பாதுகாப்பாகவும் வசதிக்கேற்பவும் செலுத்த பின் வரும் பல மாற்று வழிகள் உள்ளன:

- வரிசெலுத்த முன் அங்கீகாரம் வழங்கப்பட்ட திட்டம்
- ஒரு வங்கி அல்லது இதர நிதி நிறுவனம் மூலமாக
- நிதி நிறுவனங்களில் மூலமாக இணையதளம்/தொலைபேசி வங்கி பரிவர்த்தனை
- நகர் மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள காசோலை விட்டுச்செல்லும் பெட்டி

முன்பதிவுசெய்தலுக்கான அல்லது சொத்து வரி செலுத்துதல் பற்றிய கேள்விகளுக்கு 24/7 என்னும் வசதியில் பதில்பெற, 311 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது 311@brampton.ca எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும்.

-30-

**ஊடக தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாயஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca